மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***57321—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைவருக்கும் சமமான உயர் கல்வி என்ற நிலையை உருவாக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயிர் மூச்சு முக்தி அடைந்ததும், இனி எல்லாம் முடிந்துவிட்டது, முடியாது என்றார்கள். அம்மாவின் வழியில் ஒன்றாய் நின்று நன்றாய் நடத்தி, மூன்றை முடித்து, கடமை, உண்மை, நன்மை என்ற மூன்றுடன் நான்கிற்கு நகர்கிறோம். இனி நான்கும் நமதே, எந்நாளும் நமதே. (மேசையைத் தட்டும் ஒலி) இனி நாளெல்லாம் நம் ஆட்சி, நாடெல்லாம் நல்லாட்சி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் குறித்து திரிந்து கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கும், சுற்றித் திரிந்து கொண்டிருக்கும்*

2020 பிப்ரவரி 17]

துரோகிகளுக்கும் தனது செயல்பாடுமூலம் மூன்றாண்டுகள் முத்திரை பதித்த முத்தான மக்கள் நலத் திட்டங்கள்; 16,382 கோப்புகளில் கையொப்பமிட்ட சாதனை நாயகர்; மாண்புமிகு "அம்மாவின் ஆன்மா"; அம்மா அவர்களின் வழியில் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் குடிமராமத்து நாயகர்; வாழும் கரிகால்சோழன்; டெல்டா மாவட்டங்களை இணைத்து பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2020 ஆம் ஆண்டில் வரியில்லாத நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

அனைவருக்கும் சமமான உயர் கல்வி என்ற அடிப்படையில், இந்தியாவிலேயே தமிழகத்தை உயர் கல்வியில் 49 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்த்தி, தமிழகத்திலே தருமபுரி மாவட்டத்தை உயர் கல்வியில் 98.41 சதவிகிதம் என மாற்றி அழகுபார்த்த "வாழும் அதியமான்" தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

எனது அரூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து, வெற்றி கண்ட மாண்புமிகு தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அப்பகுதியில் வருடத்திற்கு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் சேருகின்ற நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மேற்படிப்பிற்கு வெளியூருக்குச் செல்கிறார்கள். அவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 17 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 20 கல்லூரிகள் இருக்கின்றன. கடந்த, 2019–2020 ஆம் கல்வியாண்டில், 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மொத்தம் 960 மாணவ, மாணவியர் பயிலும் வகையிலே சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன. அதிலே,

685 இடங்கள் மட்டுமே பூர்த்தியடைந்துள்ளன. மீதம் 275 சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேவேளையில், 17 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலே, 2019–2020 ஆம் கல்வியாண்டிலே, 4,677 மாணாக்கர்கள் பயிலும் வகையிலே சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன. அதிலே, 1,288 இடங்கள் மட்டுமே பூர்த்தியாகியுள்ளன. மீதம் 3,389 சேர்க்கை இடங்கள் காலியாக உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதிருக்கின்ற நிலையிலே, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலே, மேலும் 275 மாணவர்களை சேர்க்கின்ற வகையிலே இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, எதிர்வரக்கூடிய காலகட்டங்களில், மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக இருக்கின்றபட்சத்திலே, மாண்புமிகு அம்மாவின் வழியில் தொடரும் இந்த அரசானது இதனைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய அரூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்பட்டுவரும் பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியில் அதிக மாணவர்கள் சேர்க்கை இருக்கின்ற காரணத்தினால், புதிய பாடப் பிரிவுகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாக அரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 41 பல்கலைக்கழகங்களினுடைய உறுப்புக்

2020 பிப்ரவரி 17]

கல்லூரிகளை ஒட்டுமொத்தமாக அரசுக் கல்லூரிகளாக மாற்றி அறிவித்து, அதனடிப்படையிலே, அரசு நிர்ணயித்திருக்கின்ற கட்டணம் இப்போது வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. வரக்கூடிய கல்வியாண்டிலே அவர் கேட்கின்றபடி, கூடுதலாக வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள் கட்டுகின்ற வகையிலேயும், அதேநேரத்தில் கூடுதல் பாடப் பிரிவுகளையும் மாணாக்கர்களுக்கு வழங்கி, அங்கே மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு வசதி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

காகிதத் தொழிற்சாலை

***51459—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் உள்ள கிராமங்களில் சாகுபடி செய்யப்படும் சவுக்கு மரங்களைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்து, 'மக்கள் பணியே மகேசன் பணி' என்று எண்ணற்ற வரலாற்றுத் திட்டங்களை மாநில மக்களுக்குத் தந்து, மூன்றாண்டுகளில் ஒவ்வொரு நாளையும் வரலாற்றில் இடம் பெறுகின்ற நாளாக மாற்றி, தேசிய விருதுகள் என பல்வேறு விருதுகளைப் பெற்று, மாண்புமிகு அம்மாவின் வழியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவரோடு துணை நிற்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS